**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**
**அசல் வழக்கு எண்.** 192/2023
**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஹமதுல்லா | தொழில் | |
| த/பெ. | செய்யது முகமத் | வயது | 67 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 04.11.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.தாவா வழக்கிற்கு நான் தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். 06.07.1967 பத்திரத்திரமான வா.சா.ஆ-1 ஆவணத்தின்படி என் தகப்பனார் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சுப்பையா என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். எனது தகப்பனார் சுப்பையா அம்பலத்திற்கு வழக்கு சொத்து எப்படி பாத்தியம் என்பதை தெரிந்துக்கொண்டு தான் கிரையம் பெற்றாரா என்றால் ஆமாம். சுப்பையா அம்பலத்திற்கு வழக்கு சொத்து எந்த வகையில் பாத்தியம் என்றால் வழக்கு சொத்து அவரது பூர்வீக சொத்து ஆகும். வழக்கு சொத்து சுப்பையா அம்பலத்தின் பூர்வீக சொத்து என்பதற்கு ஆவணம் பார்த்தேனா என்றால் ஆவணம் பார்த்தேன். என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் நான் என் தகப்பனார் கிரையம் வாங்கியதை வைத்துத்தான் சொல்கிறேன்.

2. வழக்கு சொத்து சுப்பையா அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் தெரியும் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையை நான் படித்துப்பார்த்தேன் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் செட்டில்மெண்ட் காலத்திலேயே வழக்கு சொத்து பொறுத்து 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டு இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் செட்டில்மெண்ட் காலத்திலேயே அவர்களுக்கு பட்டா ஏற்பட்டு அனுபவித்து வரும் சொத்து என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 கிரைய ஆவணமானது சுப்பையா அம்பலத்திற்கு வழக்கு சொத்தைப்பொறுத்து எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு உரிய வருவாய் ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்தபிறகு நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என்னுடைய வழக்குரையில் 1ம் வாதியும் 2 முதல் 4 பிரதிவாதிகளும் பொய்யாக பட்டா மாற்றியுள்ளதாக எந்த ஆவணத்தின்அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் கணினி சிட்டா எடுக்கப்போகும்போது பட்டா மாறியிருந்தது.

4. வழக்கு சொத்துக்கு உரிய பட்டா அதற்கு முன்பு என் பெயரில் இருந்தது என்றால் சரிதான். என் பெயரில் வழக்கு சொத்துக்கு பட்டா இருந்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. எந்த காலத்திலும் என்பெயரில் வருவாய் துறையில் பட்டா ஏற்படவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் பட்டாவை மாற்ற நடவடிக்கை எடுத்ததாக குறிப்பிட்டு இருப்பதில் அதற்கான மனுவை வழக்கில் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் வருவாய் துறையில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அங்கு அது நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல.
5. நான் வேளாண்மைத்துறையில் ஜீப் டிரைவராக இருந்து ஓய்வு பெற்று இருக்கிறேன். நான் SSLC வரை படித்து இருக்கிறேன். வழக்கு சொத்தில் பணப்பயிர் விவசாயம் செய்ததாக சொல்லியிருப்பதில் என்ன விவசாயம் செய்தேன் என்றால் எள்ளு விவசாயம் மற்றும் கடலை விவசாயம் செய்தேன். வழக்கு சொத்தில் உள்ள பனைமரத்தில் இருந்து ஓலை வெட்டி எங்கள் வீட்டில் கூரைப்போட்டு இருக்கிறோம். வழக்கு சொத்து எந்த காலத்திலும் என்னுடைய அனுபவத்தில் இருந்தது இல்லை என்றாலும் வழக்கு சொத்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் வம்சாவழியினர் அனுபவத்தில் ஆதியில் இருந்து செட்டில்மெண்ட் காலத்திற்கு முன்பில்யிருந்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல.
6. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. உற்பத்திசெய்யப்பட்ட வா.சா.ஆ–1 ஆவணத்தின் அடிப்படையில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பட்டா பிரதிவாதிகளின் பெயரில் இருந்து என் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு மூல சம்பவம் எங்கு நடந்தது என்றால் 2023–ல் நடந்தது. 7வது மாதம் என்று நினைக்கிறேன் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அன்றைய தினம் என்ன நடந்தது என்றால் நான் வீடு கட்டப்போனோன் அப்போது வீடு கட்டக்கூடாது என்று சொன்னார்கள். யார்யார் அவ்வாறு சொன்னார்கள் என்றால் ராமசந்திரன், திருஞானம், ஆனந்தன் ஆகியோர் சொன்னார்கள்.
7. வழக்கிற்கு முன்னாலேயே மேற்கண்ட நபர்களை தெரியுமா என்றால் தெரியும். வழக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கின் தோதிற்காக மேற்படி சம்பவத்தை கற்பனையாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தைப்பொறுத்து உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கேட்டு இருக்கிறேன் என்றால் சரிதான். ஒரு வேலை நான் சொல்வதுபோல் பிரச்சனை நடைபெற்று இருந்தால் தாவா வழக்கில் நான் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக கோரி இருப்பேன் என்றால் சரியல்ல.
8. என் தகப்பனாருக்கு சொந்தமான சொத்து தாவா சொத்து தவிர வேறு சொத்துக்கள் இருக்கிறது என்றால் சரிதான். வயக்காடு இருக்கிறது. எங்கு இருக்கிறது என்றால் ரெத்தினக்கோட்டையில் இருக்கிறது. ரெத்தினக்கோட்டை கிராமம் என்பது வழக்கு கிராமத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். ரெத்தினக்கோட்டை கிராம சொத்தின் புலஎண் சொல்லமுடியுமா என்றால் அந்த சொத்தின் பட்டா என் பெயரில் தான் இருக்கிறது. ரெத்தினக்கோட்டை கிராமத்தில் உள்ள என் தகப்பனாரின் சொத்துக்கள் என் பெயருக்கு எப்போது பட்டா மாறியது என்றால் 10 வருடங்களுக்கு முன்னால் மாறியது. அதனால் ஒரு நிலத்திற்கான பட்டா மாறுதல் செய்வதற்கான விபரம் எனக்கு தெரியும்

என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது வழக்கு சொத்து பொருத்து பட்டா மாறுதல் செய்யாமல் இருந்ததாக சொல்வது வழக்கின் தோதிற்காக சொல்வது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என் தாயாருக்கு ஒதுக்கிய சொத்து.

9. வழக்கு சொத்து செட்டில்மெண்ட் காலத்திலேயே பிரதிவாதிகள் பெயரில் இருந்ததால் வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் அதன் அடிப்படையிலும் எந்தவிதமான உரிமையும் அனுபவமும் எந்த காலத்திலும் எனக்கு ஏற்படவில்லை என்றாலும் வா.சா.ஆ–1 ஆவணத்தின் அடிப்படையில் வழக்குரை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

<u>5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் அந்த கால SSLC படிப்பு படித்து இருக்கிறேன் என்றால் சரிதான். மும்தாஸ் பேகமும் இதர வாதிகளும் படித்தவர்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரத்தை நான் சொன்னேனா அல்லது இதர வாதிகள் சொன்னார்களா என்றால் அனைவரும் சேர்ந்து தான் சொன்னோம். வழக்குரையில் நான் உள்ளிட்ட அனைத்து வாதிகளும் வழக்குரை சங்கதிகளை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நான் அரசுப்பணியில் 1968–ல் ஜீப் டிரைவராக பணியில் சேர்ந்து 2014–கில் ஓய்வு பெற்றேன். வழக்கு சொத்து மற்றும் ரெத்தினக்கோட்டை கிராம சொத்துக்கள் தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இல்லை. வழக்கு சொத்து இருக்கும் பகுதியில் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்ட அளவை எந்த வருடம் நடைபெற்றது என்பது தெரியுமா என்றால் தெரியாது.

2. 5,6,7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் படித்துப்பார்த்து தெரிந்துக்கொண்டேன். அவ்வாறு படித்துப்பார்த்து தெரிந்துக்கொண்டதில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தகப்பனார் பெயரில் யூ.டி.ஆர் காலத்தில் பட்டா ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 5 முதல் 7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தகப்பனார் பெயரில் 1985ஆம் ஆண்டே பட்டா ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ச ரிதான். மேற்படி தகவல் தெரிந்தபிறகு பட்டாவை ரத்துச்செய்ய வருவாய் துறையில் மனு தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு கொடுத்து இருக்கிறேன்.

3. வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததற்கு விசாரணை அறிவிப்பு எதுவும் ஆவணமாக தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு 1985–ல் தெரியும் என்றால் தெரியாது. எனக்கு எந்த வருடம் பட்டா விபரம் தெரியும் என்றால் 2023–ல் தான் தெரியும். வழக்கு சொத்தின் சுவாதீனம் என்னிடம் இருக்கிறது என்றும் அதை தடைத்தகராறு செய்யக்கூடாது என்றும் தான் வழக்கு தாக்கல்செய்து இருக்கிறேன் என்றால் சரிதான். அனுபவம் என்னிடம் தான் இருக்கிறது. சொத்தின் அனுபவம் என்னிடம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் காலிசுவாதீனம் கேட்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றால் சரிதான்.

4. வழக்குரையில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான் வழக்குரையில் அ பரிகாரமாக நிரந்தர தடையாணை பரிகாரமும் காலிசுவாதீனம் வாதிகளுக்கு 1ம்

பிரதிவாதியிம் இருந்து கிடைக்கவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருந்து இருந்தால் காலிசுவாதீனம் 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிடைக்கத்தக்கது என்ற பரிகாரம் கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தில் 1985–ல் இருந்து அனுபவத்தில் இருந்ததால் தான் அவர்கள் பெயரில் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டத்தில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5. செட்டில்மெண்ட் அளவையிலும் நிலத்தின் உரிமையாளர் மற்றும் அனுபவதாரர் பெயருக்கு தான் அரசால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் வழக்கு சொத்தை என் தகப்பனார் வாங்கி அதன் அடிப்படையில் அனுபவம் மற்றும் சுவாதீனம் மேற்கொண்டு இருந்தால் செட்டில்மெண்ட் மற்றும் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்ட காலத்தில் என் தகப்பனார் பெயருக்கு பட்டா ஏற்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து செட்டில்மெண்ட் காலத்திலும் யூ.டி.ஆர் காலத்திலும் எங்கள் தரப்பினர் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் தான் எங்கள் தரப்பினர் பெயருக்கு செட்டில்மெண்ட் மற்றும் யூ.டி.ஆர் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஏதோ ஒரு வகையில் பரிகாரம் அடைந்துவிடாம் என்ற நோக்கில் தான் வழக்குரையில் ஒரு இடத்தில் நிரந்தர தடையாணை பரிகாரமும் ஒரு இடத்தில் காலிசுவாதீனம் பரிகாரமும் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்வதாக சொல்வது பொருத்து ஏதாவது வரிவாய்தாக்கல் செலுத்தியதற்கான ஆவணம் என்னிடம் இருக்கிரதா என்றால் இல்லை. நான் SSLC வரை படித்து இருப்பதாலும் விவசாயம் செய்து வருவதாலும் விவசாய நிலங்களுக்கு தீர்வை ரசீது செலுத்த வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் இ ருந்து இருந்தால் வரி ரசீதுகள் செலுத்தி இருப்பேன் என்றாலும் இல்லை என்பதால் தான் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் தான் விபரம் தெரிந்தபிறகு அனுபவம் செய்து வருகிறேன். (வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தைப்பொறுத்து வழக்கு சொத்தில் எனக்கு உரிமையும் அனுபவமும் ஏற்படவில்லை என்பதால் தான் எனக்கு பட்டா ஏற்படவில்லை என்ற கேள்வி எழுப்பப்பட்டது அதை பொறுத்து வாதிகள் தரப்பில் 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இருப்பதால் வாதியின் உரிமை மூலத்தைப்பொறுத்து கேள்வி எழுப்ப 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை என்று ஆட்சேபிக்கப்பட்டது. 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் உரிமை மூல ஆவணமான 1967 ஆவணத்தைப்பொறுத்து கேள்வி எழுப்பப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் வாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்திற்கு வரவில்லை என்பதால் தான் பட்டா ஏற்படவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டதாக சொல்லப்பட்டது. வழக்குரையில் 5 முதல் 7 பிரதிவாதிகள் பொறுத்து பத்தி 5–ல் வருவாய் துறை அதிகாரிகள் வாதிகளுக்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் பட்டாவை மாற்றம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும் சட்டப்புரமான வகையில் மாற்றப்பட்ட பட்டா வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியது இல்லை என்று கட்சி செய்யப்பட்டுள்ளதால் பட்டா என்பது சுவாதீனத்தை பொறுத்து ஏற்படும் ஆவணம் என்பதாலும் மேற்கண்ட கேள்வியானது வா.சா.ஆ.1 அடிப்படையில் வாதிகள் சட்டப்படியான சுவாதீனத்திற்கு வந்தார்களா என்பது பொறுத்து மட்டும் அமைந்துள்ளதால் வாதி தரப்பு ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு மேற்கண்ட கேள்வி பதிவு செய்யப்படுகிறது) வா.சா.ஆ–1 ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளுக்கு சுவாதீனம் ஏற்படவில்லை

என்பதால் தான் அவர்கள் பெயருக்கு பட்டா வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**